மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.113/2016</u>

2026ம் ஆண்டு பிப்ரவரி 26ம் நாள் வியாழக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சக்திவேல் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>26.02.2026 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு</u>

<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. தெய்வசிகாமணி கவுண்டர் என்பவர் என்னை மகன் இல்லை என்றும் அவரது சொத்துக்களில் எனக்கு பங்கு எதுவும் இல்லை என்றும் சொன்னதால் நான் ஈரோடு சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.39/2005 என்ற வழக்கை தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம். மேற்படி வழக்கில் தெய்வசிகாமணி கவுண்டர் என்பவர் அவரது சொத்துக்களை விற்பனை மற்றும் வில்லங்கத்திற்கு உட்படுத்தக் கூடாது என்று நான் ஒரு மனுவை தாக்கல் செய்திருந்தேன் என்றால் ஆமாம். அந்த மனுவானது 137/2005 என கோப்பிற்கு எடுக்கப்பட்டது என்றால் ஆமாம்.

2. அந்த மனுவில் தெய்வசிகாமணி கவுண்டர் என்பவர் எதிருரை தாக்கல் செய்திருந்தார் என்றால் பொய்யான சங்கதிகளை சொல்லி எதிருரை தாக்கல் செய்தார். அதில் எனது பிறப்பு சான்றிதழ் மற்றும்

பள்ளி சான்றிதழ் ஆகியவற்றின் நகல்களை இணைத்து தாக்கல் செய்திருந்தார் என்றால் பொய்யான ஆவணங்களை உண்டாக்கி தாக்கல் செய்தார். மேற்படி வழக்கில் தெய்வசிகாமணி கவுண்டர் தாக்கல் செய்திருந்த எதிர்வழக்குரையுடன் ஆவணங்களை இணைத்து தாக்கல் செய்திருந்தார் என்றால் அது பொய்யான ஆவணங்கள். மேற்படி அசல் வழக்கு மற்றும் இடைக்கால மனுவில் தெய்வசிகாமணி கவுண்டர் தாக்கல் செய்திருந்த எதிருரை மற்றும் எதிர்வழக்குரை ஆகியவற்றில் கண்டுள்ள சங்கதிகள் பொய்யானது என்று நான் பதில் உரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த வழக்கை நடத்தவில்லை அதனால் தாக்கல் செய்யவில்லை.

3. மேற்படி வழக்கில் தெய்வசிகாமணி கவுண்டரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த எதிர் வழக்குரை மற்றும் எதிருரை ஆகியவற்றில் கண்டுள்ள ஆவணங்கள் மற்றும் சங்கதிகள் உண்மையிலேயே பொய்யாக இருந்திருந்தால் நான் அதை மறுத்து கண்டிப்பாக பதில் உரை தாக்கல் செய்திருப்பேன் என்றும் அது உண்மை என்பதால் தான் நான் எந்த பதில் உரையும் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.6 மற்றும் பி.வா.சா.ஆ.7 ஆவணங்களான எனது பிறப்பு மற்றும் பள்ளி சான்றிதழ் ஆகியவற்றை தெய்வசிகாமணி கவுண்டர் என்பவர் மேற்படி நான் தாக்கல் செய்திருந்த பாகப்பிரிவினை வழக்கில் ஆவணங்களாக எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்திருந்தார் என்றால் அது பொய்யான ஆவணங்கள்.

4. பி.வா.சா.ஆ.6 ஆன பிறப்பு சான்றிதழில் எனது பெற்றோர் பெயர் ராமசாமி மற்றும் பாக்கியம் என கண்டுள்ளது என்றால் அது சரியல்ல.

மேற்படி வழக்கில் தெய்வசிகாமணி கவுண்டர் தாக்கல் செய்திருந்த எதிர்வழக்குரை மற்றும் எதிருரை ஆகியவற்றில் எனது பிறப்பு மற்றும் என் தாயாரின் நடவடிக்கைகளை பற்றி கூறியுள்ளார் என்றால் அது பொய்யாக கற்பனையாக அவர் கூறியுள்ளார். மேற்படி வழக்கானது தாராபுரம் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு அ.வ.எண்.3/2005 என எண் வழங்கப்பட்டது என்றால் ஆமாம்.

5. அந்த வழக்கை நாங்கள் மேற்கொண்டு நடத்தாமல் வாபஸ் பெற்று விட்டதால் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். ஜாயிண்ட் மெமோ தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் தான் தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி வழக்கில் தரப்பினர்களால் தாக்கல் செய்யப்பட்ட ஜாயிண்ட் மெமோவில் நான் தான் தெய்வசிகாமணி கவுண்டர் என்பவரின் மகன் என்பதை பொறுத்தோ அல்லது தெய்வசிகாமணி கவுண்டர் தாக்கல் செய்த ஆவணங்கள் பொய்யானது என்றோ குறிப்பிடப்படவில்லை என்றால் எங்களுக்குள் பெரிய மனிதர்கள் மூலமாக பிரச்சனைகள் பைசல் செய்யப்பட்டதால் ஜாயிண்ட் மெமோ தாக்கல் செய்து வழக்கை வாபஸ் பெற்றுக் கொண்டோம்.

6. யார் யார் முன்னிலையில் பஞ்சாயத்து நடந்தது என்று என்னால் பெயர்கள் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் முடியும் அகிலாண்டபும் சண்முகம் மற்றும் ஊர் பெரியவர்கள் முன்பு பஞ்சாயத்து செய்யப்பட்டது மற்றவர்கள் பெயர் எனக்கு நியாபகம் இல்லை. யார் யார் முன்னிலையில் எனக்கும் தெய்வசிகாமணி கவுண்டர் என்பவருக்கும் இடையே பஞ்சாயத்து நடைபெற்றது என்பதை பொறுத்து இந்த வழக்கில் நான் ஏதேனும் சங்கதிகள் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா

அல்லது மேற்படி நபர்களை இந்த வழக்கில் சாட்சியாக விசாரித்துள்ளேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் எனது பிறந்த தேதியாக 08.10.1971 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

7. எனது பிறப்பானது 03.10.1971 தேதியிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7 ஆவணமான நான் படித்த பள்ளியான புனித அமலா அன்னை மெட்ரிகுலேஷன் பள்ளி, வெள்ளகோவில் வழங்கிய சான்றிதழில் எனது பிறந்த தேதி 09.05.1972 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பொய்யானது. மேற்படி பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் எனது தகப்பனார் பெயர் தெய்வசிகாமணி என கண்டுள்ளது என்றால் அது என் தகப்பனாரால் போலியாக வாங்கி கொடுக்கப்பட்ட ஆவணம். என் தகப்பனார் நான் தாக்கல் செய்திருந்த பாகப்பிரிவினை வழக்கில் தாக்கல் செய்த எதிர்வாதத்தில் என் தாயார் வெள்ளக்கோவில் காமராஜ் நகரில் வசிக்கும் தெய்வசிகாமணி பண்டாரம் என்பவரோடு வசித்து வந்ததாகவும் அந்த சமயத்தில்தான் நான் புனித அமலா அன்னை மெட்ரிகுலேஷன் பள்ளியில் படித்து வந்ததாகவும் சொல்லியுள்ளார் என்றால் அது பொய்யான சங்கதி.

8. பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் கண்டுள்ள தெய்வசிகாமணி என்பது தெய்வசிகாமணி பண்டாரம் என்பதை தான் குறிக்கிறது என்று சொன்னால் சரியல்ல. தாராபுரம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து எனக்கு பிறப்பு சான்றிதழ் பெறப்பட்டுள்ளது என்றால் என் தகப்பனார் தான் அதை தாக்கல் செய்து வாங்கினார். அதை தாக்கல் செய்த நாள் 29.07.1985 என்றால் ஆமாம். அதில் எனது

பிறந்த தேதி 27.08.1972 என்று கண்டுள்ளதா என்றால் அதுதான் எனது உண்மையான பிறந்த தேதி. நான் வழக்கிற்காக எனது பிறந்த தேதி 27.08.1972 என பொய்யாக சொல்கிறேன் என்றும் அது எனது உண்மையான பிறந்த தேதி கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல.

9. பி.வா.சா.ஆ.8 ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டுதான் நான் மற்ற எனது பிறந்த தேதிக்கு உண்டான ஆவணங்களை வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.31 மற்றும் வா.சா.ஆ.32 ஆவணங்களுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.13 ஆவணமானது இறந்துவிட்ட நபரின் சாட்சியம் என்பதால் அதை ஏற்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.33 ஆவணத்தில் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதியான ஞானசௌந்தரி என்பவர் தான் தெய்வசிகாமணி கவுண்டரின் முதல் மனைவி என்று கேள்விகள் கேட்கப்பட்டுள்ளது என்றால் கேள்விகள் கேட்கப்பட்டு அதை அவர் மறுத்து சாட்சியம் அளித்துள்ளார்.

10. வா.சா.ஆ.34 மற்றும் வா.சா.ஆ.35 ஆகிய ஆவணங்களில் எனது தாயாரின் கணவர் பெயரானது தெய்வசிகாமணி என்று தான் சொல்லப்பட்டுள்ளது தெய்வசிகாமணி கவுண்டர் என்று சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. தெய்வசிகாமணி பண்டாரம் என்பவர் ஒரு கற்பனையான நபர். உண்மையிலேயே தெய்வசிகாமணி பண்டாரம் என்ற நபர் ஒரு கற்பனையான நபர் என்று இருந்திருக்கும் பட்சத்தில் நான் அதை பொறுத்து மேற்படி வழக்கிலேயே ஆட்சேபனை அளித்து பதிலுரை தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.38 ஆவணமானது இந்த வழக்கு நிலுவையில்

இருந்த போது நான் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் இந்த வழக்கில் என்னால் ஆதாயம் வேண்டி பெறப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. நாளிதழில் விளம்பரம் யார் கொடுத்தாலும் போடுவார்கள் அதற்கு ஆதாரம் தேவையில்லை என்று சொன்னால் சரியல்ல.

11. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.42 முதல் வா.சா.ஆ.45 வரையிலான ஆவணங்களில் என் தகப்பனார் பெயர் தெய்வசிகாமணி என்று கண்டுள்ளது என்றால் சரிதான். என் தாயாருக்கு எந்த தேதியில் திருமணம் ஆனதாக சொல்கிறேன் என்றால் 07.04.1971. 19.12.1974 ம் தேதியில் எனது தாயார் பாக்கியம் 4 ஏக்கர் பூமியை கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் என் தகப்பனார் பெயராக தெய்வசிகாமணி கவுண்டர் என்று சொல்லப்படாமல் மாரியப்பகோனார் மகள் என்று கண்டு என் தாயார் பெற்றுள்ளார் என்றால் சரிதான். நான் சொல்வது போல் 07.04.971 தேதியில் எனது தாயார் பாக்கியம் என்பவருக்கும் தெய்வசிகாமணி கவுண்டருக்கும் திருமணம் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தெய்வசிகாமணி கவுண்டர் என்பவரின் சட்டப்படியான வாரிசு கிடையாது என்றும் என் தாயார் தெய்வசிகாமணி கவுண்டர் என்பவரின் சட்டப்படியான மனைவி கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல.

12. தெய்வசிகாமணி கவுண்டர் என்பவரை நான் ஈரோடு சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த பாகப்பிரிவினை வழக்கில் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் எனது பிறப்பு குறித்தும் என் தாயாரின் நடவடிக்கைகள் குறித்தும் தெளிவாக சொல்லியுள்ள நிலையில் நான் இந்த வழக்கில் தெய்வசிகாமணி கவுண்டர் என்பவரின் மகன் என்று

எந்த பரிகாரங்களும் கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடியாகத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.02.26 18:47:54 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்